

முதலமைச்சர், தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வடசென்னை பகுதியின் மின் உள்கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில், ராதாகிருஷ்ணன் நகர், துர்கா தேவி நகரில் உள்ள 230/110/33 கி.வோ. துணை மின்நிலையத்தின் பணிகளை, தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரில் ஆய்வு செய்தார். மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், பணிகளை விரைந்து, முழுமையாக செய்து முடிக்க அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். உடன் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.டி.சேகர், ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி,ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எபினேசர் மற்றும் மின்சார வாரிய அலுவலர்கள் உடனிருந்தனர்.

# புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்ட கழக செயலாளர்கள் அமைச்சர் எஸ்.ரகுபதி – கே.கே.செல்லபாண்டியன் அறிவிப்பு!

*புதுக்கோட்டை, அக்.31-*

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர், இயற்கை வளங்கள் மற்ற சுரங்கத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாளை (1.11.2025-சனிக்கிழமை) காலை 11 மணியளவில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா (ஏசி) மஹாலில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி, புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிரமணியன் ஆகியோர் தலைமையில் நடைபெறுகிறது. பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், அறந்தாங்கி ராசன், எம்.எம்.அப்துல்லா, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ.





முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப் பித்தன், மேயர் திலகவதி செந்தில், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், புதுக்கோட்டை விஜயா, த.சந்திரசேகரன், பி.டி.அரசக்குமார், வி. என்.மணி, சுப.சரவணன், பரணி இ.ஏ.கார்த்திகேயன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை,

செ.அசோக்பாண்டியன் கே.ஆர்.என்.போஸ், எஸ்.எஸ்.கருப்பையா,

க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, ஞான.இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, அடைக்கலம், எம்.லியாகத் அலி, அபுதாஹீர், கீரை. தமிழ்ராஜா, சு.சண்முகம், இரா.ஆனந்த், எஸ்.ஜெயராமன், ஆர்.ஆர்.கே.கலைமணி, வே. ராஜேஸ், க.ராஜேந்திரன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த தொகுதி பொறுப்பாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய,பேரூர் கழக செயலாளர்கள்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளனர்.

**பொருள்:** நவம்பர் 10ந் தேதி தமிழக முதல்வர், கழக தலைவர் தளபதி அவர்கள் புதுக்கோட்டை வருகை, மற்றும் கழக ஆக்கப்பணிகள்.

# 66வது மாநில அளவிலான குடியரசு தின தடகளப் போட்டிகள்!

## அமைச்சர்கள் கோவி.செழியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தனர்!

*தஞ்சாவூர், அக்.31-*

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் அன்னை சத்யா விளையாட்டரங்கில்

2025-2026 ஆம் கல்வி ஆண்டிற்கான பள்ளிக் கல்வி துறையால் வருடத்திற்கு ஒருமுறை நடத்தபடும் 66 வது மாநில அளவிலான குடியரசு தின தடகளப் போட்டிகளை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், சு.கல்யாணசுந்தரம் எம்.பி, ச.முரசொலி எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை. சந்திரசேகரன், க.அன்பழகன், கா.அண்ணாதுரை, தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, கும்பகோணம் மாநகராட்சி துணை மேயர் சு.ப.தமிழழகன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) இ.மாதவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தெரிவித்ததாவது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தஞ்சாவூர் மாவட்டம் அன்னை சத்யா விளையாட்டரங்கில் 20252026 ஆம் கல்வி ஆண்டிற்கான பள்ளிக் கல்வி துறையால் வருடத்திற்கு ஒருமுறை நடத்தபடும் 66 வது மாநில அளவிலான குடியரசு தின தடகளப் போட்டிகள் இன்று நடைப்பெற்றது.

இப்போட்டியில், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும், தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களிலுள்ள பள்ளிகளில் பயிலும் மாணவர், மாணவியர்கள் குறுவட்டம் மற்றும் வருவாய் மாவட்ட அளவிலான போட்டிகளில் முதல் இரண்டு இடங்களில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்கள் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் இயங்கும் விளையாட்டு விடுதிகளுக்கிடையிலான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களும் பங்கு கொள்கிறார்கள்.


இன்று முதல் 31.10.2025 வரை நடைபெறும் போட்டிகளில் 2700 மாணவியர்களும், 01.11.2025 முதல் 03.11.2025 வரை நடைபெறும் போட்டிகளில் 2600 மாணவர்களும் கலந்து கொள்கிறார்கள். 14, 17 மற்றும் 19 வயதிற்குட்பட்ட ஆகிய மூன்று பிரிவுகளில் இருபாலருக்கும் போட்டிகள் நடைபெறும்.

இப்போட்டிகளில் முதல் இரண்டு இடங்களில் (தனிநபர் போட்டிகள்) வெற்றி பெறும் மாணவ, மாணவியர் தமிழக அணி சார்பில் இந்திய பள்ளிகளுக்கான விளையாட்டுக் குழுமம் (SGFI) நடத்தும் தேசிய அளவிலான தடகளப் போட்டிகளில் பங்குபெற தகுதி பெறுவார்கள். குறுவட்ட முதல் மாநில அளவிலான போட்டிகளை நடத்துவதற்கு தமிழக அரசு ரூபாய் 12.50 கோடி தொகையை ஒதுக்கீடு செய்துள்ளது மேலும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று முதல் மூன்று இடங்களில் வெற்றி பெறும் மாணவ, மாணவிகளுக்கு முறையே ரூபாய் 2 லட்சம், 1.5 லட்சம்,

1 லட்சம் பரிசு தொகையினை அரசு வருடா வருடம் வழங்கி வருகின்றது. இப்போட்டிகளில் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்கள்.

முன்னதாக தஞ்சாவூர் மாவட்டம் தஞ்சாவூர் அன்னை சத்யா விளையாட்டரங்கில் 2025-2026 ஆம் கல்வி ஆண்டிற்கான பள்ளிக் கல்வி துறையால் வருடத்திற்கு ஒருமுறை நடத்தபடும் 66 வது மாநில அளவிலான குடியரசு தின தடகளப் போட்டி துவக்க விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தேசிய கொடி ஏற்றியும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஒலிம்பிக் கொடி ஏற்றியும், மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், பள்ளிக் கல்வித் துறை கொடி ஏற்றியும் வீரர்களின் அணி வகுப்பு மரியாதையினை ஏற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியிர் செல்வி.ப.நித்யா, வட்டாட்சியர் சிவகுமார், மாநில முதன்மை உடற்கல்வி ஆய்வாளர்கள் (ஆ).ஐ.கோபாலகிருஷ்ணன், (பெ, பொ) திருமதி. கே.ஜெயலெட்சுமி அவர்கள், மாநில மூத்தோர் தடகள சங்க தலைவர் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட தடகள சங்க தலைவர் து.கிருஷ்ணசாமி வாண்டையார், தஞ்சாவூர் மாவட்ட தடகள சங்க துணைத் தலைவர் சு.க.முத்துச் செல்வம், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ஜெ.டேவிட் டேனியல், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் பெ.கற்பகம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கரூர் மாவட்டத்தில், கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம் மற்றும் குளித்தலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பிஎல்ஏ.2, மற்றும் நிர்வாகிகளுக்கான , 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' ஆலோசனைக் கூட்டம் கரூர் பிரேம் மஹாலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.. கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ சிறப்புரை ஆற்றினார். சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் பொறுப்பாளர்கள், அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு, கிளை கழக நிர்வாகிகள் மற்றும் பூத் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



சேலம் மாநகரம் செவ்வாய்ப் பேட்டையில் முத்துராமலிங்க தேவரின் 118 வது பிறந்த தினத்தையொட்டி அவரது சிலைக்கு சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் இரா. இராஜேந்திரன் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாநகர செயலாளர் பா.ரகுபதி, பகுதி செயலாளர் சி.பிரகாஷ், கோட்டச் செயலாளர் ஏ. கண்ணன் ஆகியோர் இருந்தனர்.


### பிரமாண்ட வெற்றிகளையும் - தோல்விகளையும் சந்தித்தாலும்

# எந்த நேரத்திலும் உழைப்பை நிறுத்தாத ஒரு தலைவர் கலைஞர்!

## குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் புகழாரம்!

*திருப்பூர், அக்.31-*

பிரமாண்ட வெற்றிகளையும் தோல்விகளையும் சந்தித்தாலும் எந்த நேரத்திலும் உழைப்பை நிறுத்தாதஒரே ஒரு தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்று குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் புகழாரம் சூட்டினார்.



குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் பதவியேற்ற பின்பு முதல்முறையாக தனது சொந்த ஊரான திருப்பூருக்கு அன்று வருகை தந்தார். அவருக்கு காலை திருப்பூர் தாராபுரம் சாலையில் உள்ள திருமண மண்டபத்தில் அனைத்து தொழில் அமைப்பினர், அனைத்துக் கட்சியினர் சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது.

விழாவுக்கு வந்தவர்களை ஆயத்த ஆடை ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் (ஏ.இ.பி.சி.) துணைத் தலைவர் சக்திவேல் வரவேற்றார்.

விழாவில் குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் பேசியதாவது: நான் தி.மு.க. வுடனும், அ.தி.மு.க. வுடனும் பணியாற்றியுள்ளேன். முதல் முறையாக எம்.பி.யாக தேர்வு செய்தபோது கம்யூனிஸ்டு சகோதரர்களுடனும் பணியாற்றி இருக்கிறேன். வங்கதேச நாட்டுக்கு திருப்பூரில் இருந்து ஆயத்த ஆடைகளை நான் ஏற்றுமதி செய்தபோது நான் முழுநேர அரசியலில் ஈடுபடுவேன் என்று நினைக்கவில்லை. கே.எஸ்.சி. அரசு பள்ளியில் படிக்கும்போது கூட மாணவர் தலைவராக நான் வெற்றி பெற்றேன்.

**கலைஞரின் உழைப்பு தான் ஒப்புயர்வற்ற தலைவராக உயர்த்திக் காட்டியது!**

நான் சார்ந்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மிக எதிரானது என்பது எல்லோருக்கும் தெரிந்தது தான். சார்ந்திருந்த இயக்கம், இப்பொழுது நான் எந்த இயக்கத்தையும் சார்ந்தவன் அல்ல, ஆனால் கலைஞரிடத்திலே எனக்கு பிடித்த ஒன்று எந்த நேரத்திலும் உழைப்பை நிறுத்தாத ஒரு தலைவர் கலைஞர் அவர்கள், மிக பிரம்மாண்டமான தோல்வி வரும், பிரம்மாண்டமான வெற்றி அல்ல, மிக பிரம்மாண்டமான தோல்வி வரும், அவர் மட்டுமே வெற்றி பெற்றிருப்பார், ஆனாலும் கூட அடுத்த நாள் காலையிலே முரசொலியை நான் வாங்கி படிப்பேன்

ஆனாலும் அடுத்த நாள் காலையிலே அவர் எழுதுவார் முரசொலியில் வீறு கொண்டு எழுந்து வா!, தமிழினத்தினுடைய எதிர்காலத்தை கட்டிக் காக்கின்ற பொறுப்பு உனக்கு மட்டும்தான் இருக்கிறது என்று எழுதியிருப்பார் அவருடைய அந்த உழைப்பு தான் அவரை ஒப்புயர்வற்ற தலைவராக மீண்டும் உயர்த்தி காட்டியது, தோல்விக்கு பிறகு அவர் ஒரு வெற்றியைப் பெற்றார் என்று சொன்னால் அதற்கு காரணம் தோல்வியைப் பற்றி துவண்டு விடாமல் அவர் தொடர்ந்து உழைத்தது தான்.

திருப்பூர் பின்னலாடை பல்வேறு சிரமங்களை சந்தித்து வளர்ந்து வருகிறது. சாய ஆலைப்பிரச்சினை தொடர்பாக கோரிக்கை வைத்து தீர்வு காணப்பட்டது. பின்னலாடை ஏற்றுமதியில் 50 சதவீதம் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கிறோம். இன்றைக்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்துள்ள வரியை, திருப்பூர் பின்னலாடை தொழில் தாங்காது. நீங்கள் நம்பிக்கையை இழக்க வேண்டாம்.

மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் பியூஸ் கோயலை 3 முறை நான் சந்தித்து பேசியுள்ளேன். அமெரிக்காவிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். கருத்துகள் பரிமாறப்படுகிறது. இருப்பினும் சிறிது கடினம் தான்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஆஸ்திரேலியாவில் - உலகளாவிய மனிதநேய மாநாடு!

## கார்த்திகேய சிவசேனாபதி நிறைவுரையாற்றுகிறார்!

*சென்னை, அக். 31 -*

ஆஸ்திரேலியாவில் நடைபெறும் உலகளாவிய மனிதநேய மாநாட்டில் புலம்பெயர்ந்த தமிழர்கள் நல வாரிய தலைவர் கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி நிறைவுரையாற்றுகிறார்.



வருகின்ற01.11.2025 சனிக்கிழமை அன்று ஆஸ்திரேலியாவில் நடைபெறும் மனிதநேய மாநாட்டில், தமிழ்நாடு அரசு, புலம்பெயர்ந்த தமிழர்கள் நல வாரியத்தின் முதல் தலைவர், சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சுற்றுச்சூழல் அணிச் செயலாளருமான கார்த்திகேய சிவசேனாபதி "செயலில் மனிதநேயம் : நிலையான எதிர்காலத்திற்கான சுதேச ஞானம் மற்றும் சுற்றுச்சூழல் நெறிமுறைகள்" என்ற தலைப்பில், பாரம்பரிய சூழலியல் ஞானம் மற்றும் கலாச்சார விழுமியங்கள் உலக வளர்ச்சியின் மிகவும் இரக்கமுள்ள மற்றும் நிலையான மாதிரிக்கு வழிகாட்டும் கொள்கைகளாக எவ்வாறு செயல்பட முடியும் என்பதில் கவனம் செலுத்து பற்றியும், பூர்வீக கால்நடை பாதுகாப்பு, நிலையான விவசாயம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புலம்பெயர்ந்தோர் நலன் ஆகியவற்றில் அவரது விரிவான பணியை எடுத்துரைத்தும், மனிதநேயம் என்பது ஒரு தத்துவம் மட்டுமல்ல, மாறாக பகுத்தறிவு, பச்சாதாபம் மற்றும் வாழ்க்கையின் அனைத்து வடிவங்களுக்கும் ஒருங்கிணைக்கும் ஒரு நடைமுறை நெறிமுறை என்பதை வலியுறுத்தியும், காங்கயம் கால்நடை பாதுகாப்பு அமைப்பு போன்ற தமிழ்நாட்டின் உள்நாட்டு நடைமுறைகள் மனித செழுமையையும் சூழலியல் பாதுகாப்பையும் சமநிலைப்படுத்தும் ஒரு உயிருள்ள மனிதநேய அணுகுமுறையை எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பதை எடுத்துக்காட்டியும்,

"உண்மையான மனிதநேயம் உயிர்களை அதன் அனைத்து வடிவங்களிலும் பாதுகாப்பதில் உள்ளது விவசாயி மற்றும் காடு, பாரம்பரியம் மற்றும் வாழ்விடம் இரண்டையும் மதிப்பிடுவதில் உள்ளது. நமது பண்டைய ஞானம், நவீன காரணத்துடன் இணைந்தால், உலகிற்கு நிலையான மற்றும் மனிதாபிமான வழியை வழங்க முடியும்." மனிதநேய மாநாடு உலகளாவிய சிந்தனைத் தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் கல்வியாளர்களை ஒன்றிணைத்து நெறிமுறைகள், சுற்றுச்சூழல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை விரைவாக மாறிவரும் உலகில் மனித விழுமியங்களை மேம்படுத்துதல் என்ற தலைப்பில் நிறைவுரையாற்றுகிறார்.


### மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் சீர்காழி, மயிலாடுதுறை, பூம்புகார் தொகுதிகளில்

# வாக்குச்சாவடி முகவர்கள் (BLA - 2) பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA) ஆலோசனை மற்றும் பயிற்சி கூட்டம்!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை! என்.இளையராஜா - மன்னை த.சோழராஜன் - மு.தினேஷ்குமார் முன்னிலை!

### மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



மயிலாடுதுறை மாவட்டத்திற்குட்பட்ட மயிலாடுதுறை, சீர்காழி, பூம்புகார் ஆகிய மூன்று சட்டமன்றத் தொகுதிகளில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க வாக்குச்சாவடி முகவர்கள் (BLA-2) பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA ) ஆலோசனை மற்றும் பயிற்சி கூட்டம் கீழ்க்கண்ட விபரபப்படி அந்தந்த சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட இடங்களில் 31.10.2025, 1.11.2025 ஆகிய இரண்டு நாற்கள் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி நடைபெற உள்ளது. தொகுதியில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதி பார்வையாளர்களான என்.இளையராஜா, மன்னைத.சோழராஜன், மு.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் இந்த கூட்டங்களில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

| நாள் | தொகுதி | இடம் |
|---|---|---|
| 31.10.2025 மாலை 5.00 | பூம்புகார் | பாலாஜி திருமண மண்டபம். நல்லாடை |
| 1.11.2025 காலை 10.00 | சிர்காழி | இந்திரபவன் திருமண மண்டபம் வைத்தீஸ்வரன் கோயில் |
| 1.11.2025 மாலை 5.00 | மயிலாடுதுறை | ஆர்.ஜி.ஆர்.திருமண மண்டபம். நாகங்குடி |

இக்கூட்டத்திற்கு தொகுதி பர்வையாளர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கிளை, வார்டு கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி,
2.SIR (சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு) குறித்து.
3. கழக ஆக்கப்பணிகள்.

**நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ.,**
செயலாளர்
மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க.